பொருளுக்குக் கொண்டுவருகிற சாத்தியக்கூறு இருக்குமா என்பதில் ஐயப்பாடு உள்ளது. இருந்தாலும் உபரி வரி, உபரி மேல் வரி போன்றவற்றை பெரும்பாலும் பயனாளிகளிடமிருந்துதான் வசூலிக்கிற நிலைமை இருக்கிறது. ஒரு ஹோட்டலில் அல்லது விடுதியில் யாராவது தங்கினாலும் கூட அந்த விடுதிக்காரர் உபரி வரி, உபரி மேல் வரி ஆகியவற்றைக் கட்டுவதில்லை. அங்கே யார் பயனாளிகளோ அவர்களிடம் இருந்துதான் அது வசூலிக்கப்படுகிறது. எனவே அதை நிறுத்தி வைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற வரி விதிப்பு முறையில் உபரி வரி, உபரி மேல் வரி ஆகிய இந்த இரண்டு வரிகளையும் பொறுத்தவரை பில் போடும் போது தனித்தனியாகத்தான் எழுதுகிறார்கள். அதில்தான் வித்தியாசமே தவிர இதை ஒருங்கிணைப்பதால் யாருக்கும் எந்தவிதமான நஷ்டமோ அல்லது இலாபமோ கிடையாது. ஆகவே தற்போதைக்கு இதை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

முற்பகல் 10-40

12—

தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளின் தூய்மையைப் பாதுகாத்தல்

***16296—திரு. ப. ரங்கநாதன் :**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஏரிகளின் தூய்மையைப் பாதுகாக்க பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான பெரிய சிறிய ஏரிகள் ஆறுகள் ஆகியவற்றில் தூய்மை பொதுவாக நன்கு பராமரிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள

1994 நவம்பர் 4]

உதகமண்டலம் ஏரி மாசுபடுவதைத் தடுக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைக்கும் திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாலும். திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் ஏரியின் தூய்மையைப் பாதுகாக்க அங்குள்ள உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைக்கும் திட்டப்பணிகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தாலும் செயலாக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், சென்னைப் பெருநகர் பகுதிகளில் இருக்கின்ற பல தொழிற்சாலைகளிலிருந்து கழிவுநீரை வெளியேற்றுகிறார்கள். குறிப்பாக எண்ணூர் பகுதியிலும். அதேபோன்று அம்பத்தூர் பகுதியிலும் ரெட்ஹில்ஸ் பகுதியிலும் மற்றும் தாம்பரம் போன்ற பகுதியிலும் இதுபோன்ற நிலை இருக்கிறது. சென்னைக்குத் தேவையான குடிநீர் இந்தப் பகுதிகளிலிருந்துதான் வருகிறது. அந்தப் பகுதிகளில் தொழிற்சாலைகள் வெளியிடுகிற கழிவுநீரானது அங்குள்ள ஏரிகளில் கலந்து விடுகின்ற காரணத்தால் பல்வேறு வியாதிகள் வருவதற்கு வழிவகை செய்கின்ற காரணத்தால் அரசு அந்த தொழிற்சாலைகளின் முதலாளிகளிடம் கலந்துபேசி மாசைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கின்ற கேள்வி தமிழ்நாட்டில் உள்ள ஏரிகளில் தூய்மையைப் பாதுகாக்க பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்தப்படுமா என்பதாகும். ஆகவே இதற்கென தனியாக கேள்வியை சட்டமன்றத்திலே எழுப்புவாரானால் அதற்குரிய பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "ஸ்பெசிபிக் இன்சிடென்ட்" பற்றித் தெரிவித்து தனிக் கேள்வி கொடுத்தால் அமைச்சர் அதற்குப் பதில் சொல்லுவார்கள், ஒட்டுமொத்தமாக கேட்பதாக ஒரு துணைக் கேள்வி அமையக்கூடாது.

[1994 நவம்பர் 4

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. சென்னைப் பெருநகர் பகுதியிலே இருக்கின்றன. அதேபோல் வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகள் இருக்கின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரசாயனத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. தூத்துக்குடியில் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆகவே அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற தொழிற்சாலைகள் கழிவுநீரை வெளியிடுகின்றன. அதனால் ஏரிகளிலே மாசு ஏற்படுகிறது. அதேபோல் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது. விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. விவசாயமே செய்யமுடியாத சூழ்நிலை தமிழகத்தின் பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. இதை எல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்துத் தொழிற்சாலைகளையும் நடத்துகின்ற முதலாளிகளிடம் கலந்து பேசி பொதுவாக ஆங்காங்கே ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படி கழிவுநீர் வெளியேற்றப்படுவதை தடுத்து அங்கே சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள பல குறிப்பிட்ட ஏரிகள், குளங்கள், ஆறுகள், அணைக்கட்டுகள், கால்வாய்கள் ஆகியவற்றின் கரைகளிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்குள் அதிக அளவு மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அதாவது highly polluting industries - red category என்று சொல்லக்கூடிய தொழிற்சாலைகள் எதுவும் ஆரம்பிக்கக் கூடாது என்று அரசு ஆணை எண் 213 சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை நாள் 30-3-1989-ன்படி தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடை உத்தரவை மீறி மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் எந்தத் தொழிற்சாலைக்கும் அனுமதி வழங்கப்படாது. அப்படி ஏற்கெனவே இருக்கும் அந்த விதியை மீறினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் உறுப்பினர் அவர்கள் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் ஆறுகள், ஏரிகள், குளங்கள் போன்ற பகுதிகளில் கலந்து மாசு படுத்துவதைத் தடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்று கேட்டார்கள். அதன்படி இப்போது பெரிய நகரங்களில் குறிப்பாக திருப்பூர், ஈரோடு, கரூர் அதேபோன்ற அதிகமான சாயப்பட்டறைகள் சலவைப் பட்டறைகள் இருக்கின்ற அந்தப் பகுதிகளில் பொது சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தி மாசுபடுவதைத் தடுப்பதற்கு அரசு வேகமாக முயற்சிகளை

மேற்கோள் நூல்

எடுத்துவருகிறது. அதன்படி என்னுடைய தொகுதியான கரூரில் இது போன்ற சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேறுகிற கழிவுநீரை பொது சுத்திகரிப்பு தொழிற்சாலை ஏற்படுத்தி சுத்தப்படுத்துவதற்காக வருகின்ற 6-11-1994-ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் நானே அந்த தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்ட இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு க. அர்ச்சுனன். மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

13—

முதியோர் இல்லங்கள் மாவட்டந்தோறும் அமைத்தல்.

33235—திரு. க. அர்ச்சுனன்:***

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெற்ற பிள்ளைகள், பெண்களால் கவனிக்கப்படாத முதியோர்களைப் பராமரிக்க பாதுகாப்பு இல்லங்கள் மாவட்டந்தோறும் அமைக்கப்படுமா?

(ஆ) இதில் வசதி படைத்தவர்களுக்கென கட்டண அடிப்படையில் தனியாக அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர்களைப் பராமரிப்பதற்காக தற்போது தமிழக அரசு பின்பற்றி வருகின்ற இந்தத் திட்டத்திற்கு—நல்ல திட்டத்திற்கு—மத்திய அரசு உதவுகிறது. அது எந்த அளவுக்கு உதவி வருகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.